***கவனிக்க.***–*2024.05.22 ஆந் திகதிய இல. 2386 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

***கவனிக்க.***– *இவ் வர்த்தமானியின் பகுதி* VI *இல் 2024 ஆம் ஆண்டுக்கான கேகாலை மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டிய லொன்று தமிழ் , சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2387 - 2024 මැයි මස 31 වැනි සිකුරාදා - 2024.05.31

*2387 ஆம் இலக்கம் – 2024 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III – காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | – |
| முன்னறிவித்தல்கள் | – |
| இறுதிக் கட்டளைகள் | – |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | – |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | – |
| மேல் மாகாணம் | – |
| மத்திய மாகாணம் | – |
| தென் மாகாணம் | – |
| வட மாகாணம் | – |
| கிழக்கு மாகாணம் | – |
| வடமேல் மாகாணம் | – |
| வடமத்திய மாகாணம் | – |
| ஊவா மாகாணம் | – |
| சப்பிரகமுவ மாகாணம் | – |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | – |

| | பக்கம் |
|---|---|
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | – |
| மேல் மாகாணம் | – |
| மத்திய மாகாணம் | – |
| தென் மாகாணம் | – |
| வட மாகாணம் | – |
| கிழக்கு மாகாணம் | – |
| வடமேல் மாகாணம் | – |
| வடமத்திய மாகாணம் | – |
| ஊவா மாகாணம் | – |
| சப்பிரகமுவ மாகாணம் | – |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | – |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | – |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | – |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 236 |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2024, யூன் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூன் மாதம் 7 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

235 - B 82575 - 353 (2023/05)

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/74173
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NWP/PLC/L9/PN/LTL/14.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பன்னல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 1528, பரகம்மன கிராம அலுவலர் பிரிவினைச் சேரந்த பரகம்மன கிராமத்தின் காணி உத்தியோகத்தர் மூலம் தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 2023/01 இனது காணித்துண்டு இல. A இன் மூலம் காட்டப்படுகின்ற 0.2141 ஹெக்டயர்அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு நெபுரொனெட் (தனியார்) கம்பனியின் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : வீதி ஒதுக்கம்;
கிழக்கு : எப். வி. பி. இல. 325 இனது காணித் துண்டு இல. 234 இனது எஞ்சிய பகுதி;
தெற்கு : எப். வி. பி. இல. 325 இனது காணித் துண்டு இல. 234 இனது எஞ்சிய பகுதி மற்றும் காணித் துண்டு இல. 242;
மேற்கு : எப். வி. பி. இல. 325 இனது காணித் துண்டு இல. 241 மற்றும் 227.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2024.03.20 ஆம் திகதியிலிருந்து இலிருந்து முப்பது வருடங்கள் வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா.5,000,000) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்டுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர் (வடமேல் மாகாணம்) / பிரதேச செயலாளர், செயற்திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகைகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2024.03.20 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

(ஒ) குத்தகையானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் நிலுவைப் பணத்திற்கு 10% தண்டப் பணம் அறவிடப்படும்;

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதிலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, மே 03.

05 - 310

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/63577.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: LOC/AM/LAND/LEASE/DAMANA/37.

### முடிக்குறிய காணிப்பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாறை மாவட்டம் தமண பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட W.26.D, கல்கந்த கிராம அலுவலர் பிரிவைச்சேர்ந்த கல்கந்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள குடியேற்ற உத்தியோகஸ்தரிடம் காணப்படும் பட்டியலில் 10 பேர்ச் விஸ்தீரமுள்ளதான அரச காணியின் ஒரு பகுதி திரு. ஹேனக்கா ராலலாகே பிரியந்த ஜெயரத்ன என்பவருக்கு வர்த்தக நோக்கத்திற்காக குறிப்பிட்ட காலத்திற்கு குத்தகைக்கு தருமாறு கேட்டு விண்ணப்பித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு,

வடக்கு : கல்கந்த தேவலகஹிந்த பாதை;
கிழக்கு : அரச காணி மற்றும் கால்வாய் ஒதுக்கீடு;
தெற்கு : JW6கால்வாய் ஒதுக்கீடு;
மேற்கு : நெற் களஞ்சியசாலைக்கு அண்மித்த அரச காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கு அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் அங்கீகரித்த 2021.08.10 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி).

(ஆ) **வருடாந்த குத்தகை**.- 2021 ஆம் வருடத்திற்கான காணியின் மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணயின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூ. 5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% ஆகும். 2021 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ஐந்து மில்லியனுக்கு (ரூ. 5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். வருடாந்கக் குத்தகையாக கொடுபடல் வேண்டும். இந்கப் குத்தகைப்பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப்பணத்தின் 20% கூட்டி வருடாந்கக் குத்தகையாக செலுத்தப்படல் வேண்டும்.

**தவணைப்பணம்**.- வருடாந்த குத்தகையின் மும்மடங்கு தவணைப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுரும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் இலங்கை முதலீட்டு சபை மற்றும் வேறு நிறுவனங்களால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகைக் கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் கீழ் குத்தகைக்கு விடுவதற்கோ அல்லது சபைக்குள் கைமாற்றம் செய்வதற்கோ அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகை பணத்தை முறையாக செலுத்தல் வேண்டும். பணத்தை செலுத்துவதில் குறைபாடு இருந்தால் ஒப்பந்தம் அனுவாவே காலாவதி ஆகிவிடும்;

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்தமாணியில் பிரசுரித்த தினத்திலிருந்து 06 வாரங்களுக்குள்ளாக எனக்கு கிடைக்கத்தக்க தாக, எழுதி அனுப்பாதுவிடின் இக்காணி குத்தகைக்கு வழங்கப் படும்.

சமீர. பி. ஹெட்டிஆரச்சி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 03.

05 - 317

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.